


முஹம்மது அஃப்ஸல் குரு விவகாரத்தை இந்த இதழில் முடித்துவிடலாம். கிரீஸை விட்டுத் தாண்டி வந்து அடிக்கிற ஆட்டம்தான் என்றாலும், பின்னால் திரும்பத் திரும்ப வந்து இடையில் அவர் தலைநீட்டக் கூடாதல்லவா?

இந்த அஃப்ஸல் குரு என்கிற பெயர் பேப்பர்களில் அடிபட ஆரம்பித்த பிறகு, நாடாளுமன்றத் தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட மற்ற பதினொரு பேரும் செய்தி மரணம் அடைந்து விட்டார்கள். வேறு பேச்சு மூச்சே கிடையாது. எப்போது செய்திப் பக்கம் போனாலும் அஃப்ஸல் குருதான். நடுவில் டெல்லி பேராசிரியர் கீலானி கொஞ்ச நாளைக்கு கோர்ட்டுக்குப் போகும் போட்டோக்கள் வந்துகொண்டிருந்தன. நீதி மன்றத்திலிருந்து அவர் திரும்பிய ஒரு சமயம் யாரோ சுட்டுக் கொல்லப் பார்த்த சம்பவத்தால், அவர் கொஞ்ச நாள் கவனத்தில் இருந்தார். அப்புறம் அவரை நிரபராதி என்று நீதிமன்றம் சொல்லிவிட்டது. சமர்த்தாக வீட்டுக்குப் போய்விட்டார். இன்றைக்கு வரை மாட்டிக் கொண்டிருப்பது அஃப்ஸல் குருதான்.

அருந்ததி ராய் முதல், தேசத்தில் இருக்கும் அத்தனை மனித உரிமைப் போராளிகளும் வட இந்தியப் பத்திரிகைகளும் – குறிப்பாக காஷ்மீர் மாநிலத்திலிருந்து வரும் எல்லா பத்திரிகைகளும் அஃப்ஸல் குருவுக்காக இன்றுவரை போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவரது மரண தண்டனை ரத்து செய்யப்பட வேண்டும்.

ஏன்?
இங்கேதான் கதை டெல்லியிலிருந்து காஷ்மீருக்கு மாறுகிறது. அஃப்ஸல், 1990-ம் ஆண்டு ஜம்மு – காஷ்மீர் விடுதலை முன்னணி என்னும் போராளி அமைப்பில் உறுப்பினராக இருந்தவர். கொஞ்ச நாள் பாகிஸ்தானுக்குப் போய் டிரெய்னிங் எல்லாம் எடுத்திருக்கிறார். ஆனால், ஒரு சில மாதங்கள் மட்டுமே.

முஸஃபராபாத்தைச் சுற்றியுள்ள பிராந்தியங்களில், இரவு பகலாக இயங்கும் தீவிரவாத டிரெய்னிங் கேம்ப்கள் கணக்கற்றவை. பிறவி பாகிஸ்தானிகளின் கேம்ப்கள், ஆப்கன் பழைய முஜாஹிதீன்களின் கேம்ப்கள், காஷ்மீர் இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் கேம்ப்கள், காஷ்மீரிகளுக்கு பாகிஸ்தான் உளவுத்துறை பயிற்சியளிக்கும் கேம்ப்கள் என்று மூலைக்கு மூலை டீக்கடை மாதிரி ஏகப்பட்ட பயிற்சி முகாம்கள் அங்கே உண்டு.

இந்த இயக்கங்களைச் சேர்ந்த தீவிரவாதிகளில் பெரும்பான்மையோருக்கு லட்சிய தாகம் ஏதும் கிடையாது. அவர்கள் சித்தாந்தத்தால் உந்தப்பட்டு, ஆயுதம் ஏந்திய போராளிகள் அல்லர். காஷ்மீர் என்பதை ஒரு போதை மருந்தாக உள்ளுக்குள் செலுத்திச் செலுத்தி, அதையே ஜபிக்கத் தொடங்கிவிட்டவர்கள். தவிரவும் ஓர் இயக்கத்துக்கு அடுத்தது ஆகாது. இவர்களுக்கு அவர்களைப் பிடிக்காது. ஒருத்தரை ஒருத்தர் குறை சொல்வது, சந்தர்ப்பம் கிடைத்தால்

மோதிக்கொள்வது எல்லாம் அடிக்கடி நடக்கும். பணம் மிகப்பெரிய ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தது. எல்லாம் ஐ.எஸ்.ஐ அளிக்கிற பணம்.

காஷ்மீரின் விடுதலை என்னும் ஒரே நோக்கோடு, பாகிஸ்தானை நம்பி டிரெய்னிங்குக்குப் போன அஃப்ஸல் போன்ற சில போராளி இயக்க ஆர்வலர்களுக்கு இந்தக் குழு மனப்பான்மையும் கோஷ்டி மோதல்களும் மிகுந்த அவநம்பிக்கை அளித்தன. தவிரவும், காஷ்மீரை இந்தியாவிடமிருந்து மீட்டு பாகிஸ்தானுடன் இணைப்பது என்பது அஃப்ஸலுக்கு ஆகாத காரியம். அவரது விருப்பம், காஷ்மீர் சுதந்திரத் தனிநாடாக வேண்டுமென்பது. ஆகவே, ஒத்துவராமல் பாகிஸ்தானுக்குச் சென்ற சில மாதங்களிலேயே ஊர் திரும்பிவிட்டார்.

தனது போராட்ட எண்ணங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு உருப்படியாக ஏதாவது செய்யலாம் என்று நினைத்து, டெல்லிக்குச் சென்று, விட்ட படிப்பைத் தொடரமுடியுமா என்று பார்த்தார். ஆனால், முன்னாள் போராளி என்பது அவருக்கு மிகப்பெரிய பிரச்னையாக இருந்தது. ஒரு காரியத்தையும் உருப்படியாகச் செய்ய முடியவில்லை. பஸ்ஸுக்குச் சில்லறை எடுக்க பாக்கெட்டில் கையை விட்டால் கூட துப்பாக்கியை உருவுகிறானோ என்று பார்த்தார்கள்.

என்ன செய்யலாம் என்று யோசித்தார். அமைதியான ஒரு வாழ்வை உத்தேசித்து, நீண்ட யோசனைக்குப் பிறகு, இந்திய ராணுவத்திடம் சரணடைந்து மறுவாழ்வு கோரலாம் என்று முடிவு செய்தார். எல்லை பாதுகாப்புப் படையின் தலைமை அலுவலகத்துக்குச் சென்று தன்னைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிவித்து, சரணடைவதாகவும் சொன்னார்.

சரணடையும் முன்னாள் தீவிரவாதிகளுக்கு எல்லைப் பாதுகாப்புப் படை அலுவலகத்திலிருந்து ஒரு சர்டிஃபிகேட் கொடுப்பார்கள். இன்னார் இதுநாள் வரை கெட்டகாரியம் செய்துகொண்டிருந்தார், இப்போது திருந்திய மனிதனாகியிருக்கிறார். இனி இவனை நம் சமூகம் அரவணைத்துச் செல்லும் என்கிறபடியாக எழுதப்பட்டிருக்கும் ஒரு சர்டிஃபிகேட்.

ஆனால், அஃப்ஸல் விஷயத்தில் அவர் சரணடைந்த பிறகும் அவருக்குச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. 'மல்டி லெவல் மார்க்கெட்டிங் மாதிரி, நீ சரணடைந்தால் போதாது; இன்னும் இரண்டு பேரையாவது கூப்பிட்டுவந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்து மொத்தம் மூவராகச் சரணடையுங்கள். ஆயுதங்களைக் கீழே போடுங்கள். அதன்பின் சர்டிஃபிகேட் கொடுக்கிறோம்' என்று சொல்லிவிட்டார்கள்.

ஆகவே, அஃப்ஸல் தன் பழைய ஜே.கே.எல்.எஃப். தோழர்களுடன் பேசிப் பார்த்தார். மிகுந்த முயற்சிக்குப் பிறகு வேறு இரண்டு பேரும் சரணடைய ஒப்புக்கொண்டார்கள். மூன்று பேராகப் போய் சரணடைந்து ஒருவழியாக அவர் சர்டிஃபிகேட்டை வாங்கினார். கையில் இருந்த சொற்ப பணத்தைப் போட்டு ஒரு சிறு மருந்துக்கடை வைத்தார். ஏற்கெனவே டாக்டராக வேண்டும் என்கிற கனவுடன் எம்.பி.பி.எஸ் முயற்சி செய்தவரல்லவா? சரணடைந்த பிறகு குறைந்தபட்சம் மருந்துகளை விற்றாவது கனவில் கால்வாசியை நனவாக்கிக்கொள்ள முடிவு செய்தார்.

1998-ம் ஆண்டு அவருக்குத் திருமணம் ஆனது. அப்போது அஃப்ஸலுக்கு வயது 28. அவரது மனைவி தபாஸ்ஸும் (Tabassum) பதினெட்டே வயதான பெண். இனி எந்தக் கவலையும் இராது என்று காஷ்மீரிலேயே தொடர்ந்து வாழ அஃப்ஸல் முடிவு செய்ததுதான் தவறாகிப் போனது. ஒரு முறை சரணடைந்த போராளிகளை எல்லைப் பாதுகாப்புப் படையினர் அத்தோடு சும்மா விடமாட்டார்கள்.

எப்போதும் சந்தேகம். எதற்கெடுத்தாலும் விசாரணை என்று கூப்பிட்டுக் கூப்பிட்டு கோலியாடிக்கொண்டிருப்பார்கள். இது காஷ்மீரில் சர்வ சாதாரணம். எங்கே என்ன கலவரம் நடந்தாலும், குண்டு வெடித்தாலும் முதலில் சரணடைந்த தீவிரவாதிகளைத்தான் பிடித்துக் கொண்டு

போய் விசாரிப்பார்கள். நீ செய்தாயா என்பது முதல் கேள்வி. வேறு யார் செய்தார்கள் என்பது அடுத்த கேள்வி. செய்தவர்களை உனக்குத் தெரியுமா, தொடர்புண்டா என்பது மூன்றாவது.

ஒன்றுமே இல்லாவிட்டால், 'காவல் துறைக்காக நீ உளவறிந்து வந்து சொல்' என்று நான்காவதாக ஒரு கட்டளை. உருப்படியாக உளவு சொல்ல ஒரு விஷயமும் கிடைக்காவிட்டால் அடி, உதை, ரணகளம். அஃப்ஸலின் மனைவி ஏஷியன் ஏஜ் பத்திரிகைக்கு எழுதிய ஒரு கடிதத்தில் ஒரு விவரம் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு சமயம் இம்மாதிரி அஃப்ஸலை சந்தேக கேஸில் பிடித்துச் சென்று விசாரித்த இருபத்திரண்டாவது ராஷ்ட்ரீய ரைஃபிள் படையைச் சேர்ந்த மேஜர் ராம் மோகன் ராய் என்பவர் அடி உதைகளைத் தாண்டி கொடுமையின் உச்சத்தை அஃப்ஸலுக்குக் கொடுத்தார் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அஃப்ஸலை நிர்வாணமாகக் கட்டிவைத்து, அவரது பிறப்புறுப்பில் மின்சாரத் தாக்குதல் அளித்திருக்கிறார்கள். வலியில் துடித்துத் தவித்து விழுந்தவர், தாகம் என்று கதறியபோது வாயில் சிறுநீரை ஊற்றியிருக்கிறார்கள்.

இதே மாதிரி போதிய இடைவெளியில் அடிக்கடி அஃப்ஸலை வேறு வேறு சித்திரவதை முகாம்களுக்கு இழுத்துச் சென்று செமத்தியாக கவனித்திருக்கிறார்கள். ஏன் சரணடைந்தோம் என்று கதறுகிற அளவுக்கு நிலைமை மோசமாகிப் போனது. இதெல்லாவற்றையும் விட உச்சம், அஃப்ஸலின் மனைவி அடுக்கியுள்ள குற்றச்சாட்டுகளில் மிகக் கொடூரமானது லஞ்ச விவகாரம்.

ஹம்ஹமா **(Humhama)** என்கிற இடத்திலுள்ள பி.எஸ்.எஃப் கேம்ப்பில், அஃப்ஸலை விசாரணைக்கு இழுத்து வந்த ஒரு சமயத்தில் அங்கு பணியில் இருந்த வினய் குப்தா, தரீந்தர் சிங் என்கிற இரண்டு டி.எஸ்.பி.க்கள் ஒரு லட்ச ரூபாய் கொடுத்தால் விட்டுவிடுவதாக பேரம் பேசியிருக்கிறார்கள். வேறு வழியின்றி வீட்டில் இருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் முதற்கொண்டு, திருமணத்தன்று தனக்கு அணிவிக்கப்பட்ட ஒரு பொட்டுத் தங்கம் வரை அனைத்தையும் விற்று அவர்களிடம் பணத்தைக் கொடுத்து அஃப்ஸலை மீட்டார் அவரது மனைவி.
மிகவும் உருக்கமான அவரது இந்தக் கடிதம், ஏஷியன் ஏஜில் வெளியான பிறகுதான் அஃப்ஸலுக்கு ஆதரவான மனித உரிமைக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

ஆனால், எல்லைப் பாதுகாப்புப் படை என்பது இத்தனை குரூரமானதா? மிகைப்படுத்திச் சொல்லப்படுவது போல் தெரிகிறதே என்று தோன்றுகிறதல்லவா? அட, நம் வீரப்பன் விவகாரத்தில் சத்தியமங்கலம், திம்மம், ஆசனூர் கிராமத்து மக்கள் பட்ட பாடுகள் பற்றி பேப்பரில் படிக்கவில்லையா?

உண்மை என்பது மட்டும்தான் ஒன்று. நியாயம், நபருக்கு நபர் மாறக்கூடியது. ஆனாலும் சரணடைந்த ஒரு முன்னாள் தீவிரவாதி காஷ்மீரில் நிம்மதியாக வாழமுடியாது என்பது மட்டும் வெட்ட வெளிச்சம். போலீஸ் இன்ஃபார்மர்களாக அவர்களை மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டே இருப்பார்கள். மறுப்பவர்களுக்கு இம்மாதிரியான சித்திரவதைகள் கண்டிப்பாக இருக்கும். அதனால் முன்னாள் காஷ்மீர் போராளிகளுக்கு, தற்போதைய நிலவரம் பற்றி ஒன்றுமே தெரியாது; அவர்கள் பால்குடி மறந்த பாப்பாக்கள் என்று அர்த்தமில்லை.

அஃப்ஸலின் மனைவி தன் கடிதத்தில், 'காஷ்மீரில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் குழந்தையும் கூட இயக்கங்களைப் பற்றிய ஒரு தகவலாவது தெரிந்தவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் ஒரு இயக்கத்தில் இருக்கிறார்களா என்பதல்ல விஷயம். இந்தியப் பிரஜையாகத் தம்மைப் பூரணமாக உணருகிறவர்கள் கூட போராளி இயக்கங்கள் குறித்த தகவல்களை நிறைய அறிந்தவர்களாகத்தான் இருப்பார்கள். அப்பாவிகளான மக்களை போலீஸ் இன்ஃபார்மர்களாக ஆக்குவதன்மூலம் ஒரு வீட்டுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் உளவு பார்க்கவேண்டிய கட்டாயம் நேரிடுகிறது. அண்ணனுக்கு எதிராகத் தம்பி, மனைவிக்கு எதிராகக் கணவன், பெற்றோருக்கு எதிராகக் குழந்தைகள் உளவு பார்க்கவேண்டிய அவல நிலைக்குக் கொண்டுபோய் விடுகிறார்கள்' என்று எழுதுகிறார்.

இன்னோரன்ன காரணங்களால் மேற்கொண்டு காஷ்மீரில் குப்பை கொட்ட முடியாது என்று முடிவு செய்து, அஃப்ஸல் டெல்லிக்கு இடம் பெயர்ந்தார். ஒரு மனைவி. ஒரு குழந்தை. அதற்கு நாலு வயது. அதைப் படிக்க வைத்து, சந்தோஷமாக வாழவைக்கலாம் என்று முடிவு செய்து அஃப்ஸல் உழைக்கத் தொடங்கிய நேரத்தில் மீண்டும் பி.எஸ்.எஃப் ஆட்களால் அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

இம்முறை மிக வினோதமான கோரிக்கை அல்லது பணி அஃப்ஸலுக்கு வழங்கப்பட்டது. அஃப்ஸல் காஷ்மீருக்குச் சென்று அங்கே ஒரு எல்லைப் பாதுகாப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் முஹம்மது என்கிற நபரை டெல்லிக்கு அழைத்து வரும்படி அவரிடம் உத்தரவிடப்பட்டது.

எதற்காக இப்படியொரு நூதன உத்தரவு என்று அஃப்ஸலுக்குப் புரியவில்லை. எஸ்.டி.எஃப். கேம்ப்பில் இருக்கும் ஒரு நபரை அவர்களே அழைத்து வரலாமே? அதற்கு எதற்கு அஃப்ஸல்? ஆனாலும் வேறு வழியில்லாமல் அஃப்ஸல் காஷ்மீர் புறப்பட்டுச் சென்றார். தாம் முன்பின் பார்த்திராத ஜீவாத்மாவாகிய அந்தக் குறிப்பிட்ட முஹம்மதைத் தேடி அலைந்து ஒரு கேம்பில் கண்டுபிடித்துப் பேசியிருக்கிறார். அவருடன் தாரிக் என்கிற இன்னொரு நபரையும் அழைத்துக் கொண்டு டெல்லி திரும்பியிருக்கிறார்.

இந்த விவரங்கள் அனைத்தையும் முதல் கட்ட நீதிமன்ற விசாரணையின்போது அஃப்ஸல் தன் வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார். ஆனால், அஃப்ஸல் காஷ்மீர் சென்று முஹம்மதை டெல்லிக்கு அழைத்து வந்த விவரம் வரை சரி என்று ஒப்புக்கொண்ட நீதிமன்றம், எஸ்.டி.எஃப்பில் சொல்லித்தான் அவர் சென்று அழைத்து வந்தார் என்கிற தகவலை ஏற்க மறுத்துவிட்டது. அஃப்ஸலுக்காக வாதாட ஒரு வழக்கறிஞரும் அப்போது முன்வரவில்லை. தேசத் துரோகக் குற்றச்சாட்டுக்கு ஆளான ஒருவருக்கு வாதாடுவதில் இருந்த இயல்பான தயக்கம் காரணம்.

வழக்கு உயர் நீதிமன்றத்துக்குச் சென்றபோது, யாரோ ஒரு மனித உரிமை இயக்க வழக்கறிஞர் அஃப்ஸலுக்காக வாதாடத் தான் தயார் என்று சொன்னார். அஃப்ஸலும் சந்தோஷமாக நடந்த விவரங்களை அவரிடம் தெரிவிக்க, அஃப்ஸலின் மரண தண்டனைக்கு எதிராக வாதாடுவதாகச் சொன்ன அந்த வழக்கறிஞர், அந்தர் பல்டி அடித்து, 'தூக்கில் போடாதீர்கள்; விஷ ஊசி ஏற்றிக் கொன்றுவிடுங்கள்' என்று நீதிபதியிடம் கேட்டார்.

விதியே என்று அஃப்ஸலின் மனைவி வழக்கை மீண்டும் சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றார். ஆனால், டெல்லிக்கு முற்றிலும் புதியவரான அவரால் அங்கே ஒரு நல்ல வழக்கறிஞரைத் தேடிப்பிடிக்க முடியாமல் போனது. அஃப்ஸலையும் சிறைச்சாலைக்குச் சென்று சந்திப்பதில் கோடி பிரச்னைகள். ஒருவழியாக அஃப்ஸல் டிஃபென்ஸ் கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதினார். கீலானிக்காக வாதாடிய வழக்கறிஞர்களைக் கொண்டு தனக்காக ஏதாவது செய்யும்படி கேட்டார்.

இன்றுவரை மரண தண்டனைக்கு எதிரான போராட்டத்தில் அஃப்ஸலுக்கு அவர் விரும்பும் நீதி கிடைக்காவிட்டாலும், அப்போது ஒரு சீனியர் வழக்கறிஞராவது கிடைத்தார். சுஷில் குமார் என்பது அவர் பெயர். இந்த இடத்தோடு அஃப்ஸல் கதையை முடித்துக்கொள்வோம். மீண்டும் லஷ்கரைத் தொடரலாம்.

(மன்னிக்கவும். ஒரு பி.கு. இருக்கிறது. நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவத்துக்கு லஷ்கர் தொய்பாவும் ஜெய்ஷ் ஏ முஹம்மதுவும் காரணம் என்று இந்தக் காண்டத்தின் முதல் வரியில் கண்டுபிடித்தார்களே, அவர்களில் யாரையாவது ஒருத்தர் ரெண்டு பேரைக் கைது செய்திருக்கிறார்களா என்று இந்த இடத்தில் ஒரு கேள்வி வரவேண்டும். இல்லை என்பது பதில்.